ஸ்டேட் பேங் ஒப் இந்தியா

State Bank of India

இல. 16, சேர் பரோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01.

31.03.2026 இல் முடிவடைந்த காலத்திற்குரிய நிதிக் கூற்றறிக்கைகள்

வருமானகூற்று 31.03.2026 இல் முடிவடைந்த ஆண்டுக்குரியது

விபரம்	வங்கி (இலங்கை ரூபா மில்லியன்களில்) (கணக்காய்வுக்குட்பட்டது)		குழுமம் (இந்திய ரூபா கோடிகளில்) (கணக்காய்வுக்குட்பட்டது)	
	நடப்புக் காலப்பகுதி	முன்னைய காலப்பகுதி	நடப்புக் காலப்பகுதி	முன்னைய காலப்பகுதி
	01.04.2025 லிருந்து 31.03.2026 வரை	01.04.2024 லிருந்து 31.03.2025 வரை	01.04.2025 லிருந்து 31.03.2026 வரை (கணக்காய்வுக்குட்பட்டது)	01.04.2024 லிருந்து 31.03.2025 வரை (கணக்காய்வுக்குட்பட்டது)
வட்டி வருமானம்	2,901.86	2,809.19	482,797.17	462,489.35
வட்டிச் செலவுகள்	(903.82)	(720.62)	(309,676.69)	(295,524.23)
தேறிய வட்டி வருமானம்	**1,998.03**	**2,088.57**	**173,120.48**	**166,965.13**
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	288.95	258.06	36,012.94	30,918.65
தேறிய மதிப்பில் லாபம்/(நட்டம்) நிதி சொத்துக்களின் மீதான லாபம் / (நட்டம்)	3.36	20.53	-	-
ஏனைய தேறிய வருமானம்	372.53	198.17	-	30,764.41
மொத்த தேறிய வருமானம்	**2,662.87**	**2,565.33**	**209,133.43**	**228,648.19**
நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு	(79.42)	(3.39)	(42,983.17)	(39,678.54)
தனிப்பட்ட செலவினங்கள்	(273.12)	(282.70)	(65,723.78)	(64,352.24)
ஏனைய செலவினங்கள்	(474.79)	(360.54)	(30,863.19	(29,345.78)
நிதியியல் சொத்துக்களை அங்கீகரிப்பதனால் நிகர இலாபம்/நட்டம்:	-	-	-	-
வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/நட்டம்	**1,835.54**	**1,918.69**	**69,563.28**	**95,271.63**
முன்கொண்டுவரப்பட்ட லாபம் / (நட்டம்)		-	81,859.37	50,127.91
வருமான வரியும் ஏனைய வரிகளும்	(830.10)	(637.26)	10,468.73	(24,371.00)
காலத்திற்கான இலாபம்/நட்டம்	**1,005.44**	**1,281.44**	**161,891.38**	**121,028.54**
காலப்பகுதிக்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் வரி நீங்கலாக	**632.04**	**(81.87)**	**-**	-
காலப்பகுதிக்கான மொத்த அனைத்தும் உள்ளடக்கிய வருமானம்	1,637.48	1,199.56	161,891.38	121,028.54

தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்பாட்டுச் சுட்டிகள் (ஒழுங்குபடுத்துதல் அறிக்கைப்படுத்தலின்படி) 31.03.2026

விபரம்	வங்கி (இலங்கை ரூபா மில்லியன்களில்) (	
	31-மார்ச்-2026	31-மார்ச்-2025
ஒழுங்குபடுத்துதல் மூலதனம் போதுமை		
பொது உரிமையாண்மை படி 1	20,783	20,322
படி 1 மூலதனம்	20,783	20,322
மொத்த ஒழுங்குபடுத்தும் மூலதனம்	20,915	20,448
ஒழுங்குபடுத்தும் மூலதன விகிதம் (%)		
பொது உரிமையாண்மை படி1 மூலதனம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு 7.00% சொத்துக்கள் 500 மில்லியனுக்கு குறைவாக இருப்பதால்)	77.48%	72.70%
படி1 மூலதனம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு 8.5%) 7.0% சொத்துக்கள் 500 மில்லியனுக்கு குறைவாக இருப்பதால்)	77.48%	72.70%
மொத்த மூலதனம் விகிதம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு 12.5%) 7.0% சொத்துக்கள் 500 மில்லியனுக்கு குறைவாக இருப்பதால்)	77.97%	73.15%
சீராக்கிய விகிதம் (குறைந்தபட்ட தேவைப்பாடு - 3%)	41.59%	40.40%
ஒழுங்குமுறை திரவத்தன்மை		
நியதிச்சட்ட திரவச்சொத்து விகிதம்(%) (குறைந்தபட்ட தேவைப்பாடு - 100%)		
ரூபா(%)	1113.18%	2004.72%
அனைத்து நாணயங்களும் (%)	218.82%	249.34%
திரவத்தன்மை காப்பு விகிதம்(%) (குறைந்தபட்ச தேவைப்பாடு-100%)	197.27%	199.60%
சொத்துக்களின்தரம் (கடன் தளத்தின்தரம்)		
திரண்ட செயற்படா கடன்களின் விகிதம் (%) (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக)	2.62%	2.94%
தேறிய செயற்படா கடன்களின் விகிதம் (%) (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி மற்றும் ஒதுக்கம் நீங்கலாக)	25.11%	15.10%
இலாபத்தன்மை		
வட்டி எல்லை (%)	4.51%	4.56%
சொத்துக்களிலிருந்தான வருவாய் (வரிக்கு முந்திய (%)	3.95%	4.19%
பங்கு மூலதனத்திலிருந்தான வருவாய் (%)	4.82%	6.28%
வருமான விகிதம்	31.07%	25.21%
குறிப்புத் தகவல்கள்		
கடன்களின் மதிப்பீடு	Moody's Baa3 S & P BBB - Fitch BBB -	Moody's Baa3 S & P BBB - Fitch BBB -
பணியாளர்களின் எண்ணிக்கை	75	75
கிளைகளின் எண்ணிக்கை	7	7

அத்தாட்சிப்படுத்துகை:

ஸ்டேட் பேங் ஒப் இந்தியா வங்கியைச் சேர்ந்த வதிவிடத் தலைவர் மற்றும் இணக்கப்பாட்டு அலுவலர் ஆகிய கீழ் கையொப்பமிடப்பட்ட நாங்கள் கூட்டாக அத்தாட்சிப்படுத்துவதாவது:

(அ) இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கிணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இந்த அறிக்கையில் உள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படாவிட்டால் வங்கியின் கணக்காய்வு செய்யப்படாத அறிக்கையிலிருந்து எடுக்கப்படுகின்றன.

அனிடா சொன்டுமிரா
(கையொப்பமிடப்பட்டது)
வதிவிடத் தலைவர், இலங்கை
திகதி: 23.06.2026

விஷ்மிகா குணசேகர
(கையொப்பமிடப்பட்டது)
இணக்கப்பாட்டு அதிகாரி
திகதி: 23.06.2026

இலங்கையின் ஸ்டேட் பேங்க் ஓர் இந்தியாவின் விரிவான நிதிசார் தகவல்களுக்கு, எங்கள் இணையத்தளத்தைப் பார்வையிடவும் .
https://sl.statebank/corporate-governance
QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமும் நிதி அறிக்கைகளை நேரடியாகப் பெறலாம்.

நிதியியல் நிலைமைக் கூற்று 31.03.2026 இல் உள்ளவாறானது

விபரம்	வங்கி (இலங்கை ரூபா மில்லியன்களில்) (கணக்காய்வுக்குட்பட்டது)		குழுமம் (இந்திய ரூபா கோடிகளில்) (கணக்காய்வுக்குட்பட்டது)	
	நடப்புக் காலப்பகுதி	முன்னைய காலப்பகுதி	நடப்புக் காலப்பகுதி	முன்னைய காலப்பகுதி
	31-மார்ச்-2026 இல் உள்ளவாறு (கணக்காய்வுக்குட்பட்டது)	31-மார்ச்-2025 இல் உள்ளவாறு (கணக்காய்வுக்குட்பட்டது)	31-மார்ச்-2026 இல் உள்ளவாறு (கணக்காய்வுக்குட்பட்டது)	31-மார்ச்-2025 இல் உள்ளவாறு (கணக்காய்வுக்குட்பட்டது)
சொத்துக்கள்				
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	4,592.84	904.06	21,377.43	18,391.33
மத்திய வங்கியுடனான மீதிகள்	3,380.28	4,842.22	247,067.87	208,826.17
வங்கிகளிலுள்ள இருப்புக்கள்	12,353.65	17,753.06	116,114.53	113,012.19
பெறுமதி நிதியியல் சாதனங்கள்	-	-	-	
இலாபம் மற்றும் நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள்	24.41	21.06	-	
தீர்ப்பனவுக் கிரயத்தில் நிதிச்சொத்துக்கள்	-			
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	19,892.20	17,501.21	4,877,894.83	4,163,312.10
கடன் மற்றும் ஏனைய சாதனங்கள்	315.00	315.00	-	-
ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்	5,106.11	3,719.09	1,719,911.55	1,616,389.81
இணைக்கம்பனி, துணைக்கம்பனி மற்றும் கூட்டுமுயற்சிகளிலான முதலீடுகள்		-	81,342.53	74,182.93
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	571.36	624.76	54,790.35	44,107.55
நன்மதிப்புக்கள் மற்றும் அருவச்சொத்துக்கள்	189.41	136.99	504,512.93	437,831.18
மொத்தச் சொத்துக்கள்	**46,425.27**	**45,817.45**	**7,623,012.01**	**6,676,053.27**
பொறுப்புக்கள்				
வங்கிகளுக்குச் சொலுத்தப்பட வேண்டியவை	9,000.02	10,503.30	305,218.01	207,946.03
பெறுமதி நிதியியல் சாதனங்கள்	-	-	-	-
இலாபம் மற்றும் நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புக்கள்	-	-	-	-
தீர்ப்பனவுக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள்			-	-
வைப்பாளர்களுக்கு கொடுக்கவேண்டியவை	15,888.49	14,490.02	5,954,123.38	5,363,098.49
ஏனைய கடன்படுனர்களுக்கு கொடுக்க வேண்டியவை	-	-	447,554.53	374,717.52
	-	-	-	-
நடப்பு வரிப் பொறுப்புக்கள்	64.17	(147.07)	54.70	54.93
ஏனைய பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்	596.78	565.43	371,619.10	289,074.17
மொத்தப் பொறுப்புக்கள்	**25,549.46**	**25,411.69**	**7,078,569.73**	**6,234,891.15**
பங்கு மூலதனம்				
கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம்	2,442.83	2,442.83	923.06	892.46
நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம்	732.05	680.37	164,240.54	140,230.93
பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள்	12,301.24	12,513.15	114,131.32	81,859.37
ஏனைய ஒதுக்கங்கள்	5,399.69	4,769.41	265,147.36	218,179.36
பங்குதாரருக்கான மொத்த பங்கு மூலதனம்	**20,875.81**	**20,405.76**	**544,442.28**	**441,162.12**
கட்டுப்பாட்டு உரிமையற்ற ஈடுபாடுகளுக்கு		**-**	**-**	**-**
மொத்தப் பங்கு மூலதனம்	**20,875.81**	**20,405.76**	**544,442.28**	**441,162.12**
மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்	**46,425.27**	**45,817.45**	**7,623,012.01**	**6,676,053.27**
எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்	**44,080.26**	**39,709.46**	**4,342,610.77**	**2,732,684.39**

கூட்டாண்மை ஆளுகை

நிருவாக ஒழுக்க கோவை தொடர்பான வங்கிகிகளின் கோட்பாட்டுத் தொகுதி

கூட்டாண்மை நிருவாக விடயத்தில் State Bank of India அச்சொட்டாக எதுவித பிசகுமின்றி அதிசிறந்த நடைமுறைகளை கடைப்பிடித்து வருகிறது. சிறந்த கூட்டாண்மை நிருவாகம் சட்ட, ஒழுக்கவியல் தேவைகளுக்கு அமைய நடந்து கொள்வதிலும் பார்க்க மிகவும் சிறப்பானது என்று வங்கி நம்புகிறது. சிறந்த நிருவாகம் பயனார்ந்த முகாமைத்தவத்திற்கு வழிவகுப்பதுடன் வணிகத்தை கட்டுப்படுத்தி வங்கி உயர்மட்ட வணிக நீதிநெறியை பேண இயலுமைப்படுத்தி அதன் பங்குதாரர்கள் அனைவருக்கும் பெறுமதியை ஏற்படுத்துகிறது. நோக்கங்களை பின்வருமாறு சுருக்கமாக எடுத்துக் கூறமுடியும்:

- பங்குதாரரின் பெறுமதியை பாதுகாத்து மேம்படுத்துவது
- வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மொத்தத்தில் ஏனைய அனைவரினதும் நலன்களை பாதுகாப்பது.
- தொடர்பாடலில் வெளிப்படைத் தன்மையையும் நேர்மையையும் உறுதிப்படுத்தி முழுமையானதும் சரியானதும் தெளிவானதுமான தகவலை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கிடைக்கச் செய்வது.
- செயற்பாட்டுக்கும் வாடிக்கையாளர் சேவைக்கும் பொறுப்புக் கூறும் தன்மையை உறுதிப்படுத்துவதும் சகல மட்டங்களிலும் மகத்துவத்தை ஈட்டிக் கொள்வதுமாகும்.
- மற்றவர்களைவிட சிறந்த முறையில் கூட்டாண்மை தலைமைத்துவத்தை வழங்குதல்.

வங்கி பின்வருவனவற்றை அர்ப்பணிப்புடன் செய்கிறது:

- வங்கியின் பணிப்பாளர்கள் சபையினர் கிரமமாக கூடுவதையும் வணிகத்திலும் செயற்பாட்டு விடயங்களிலும் பயனார்ந்த தலைமைத்தவத்தையும் நுண்நோக்கையும் கடைப்பிடிப்பதையும் வங்கியின் நடவடிக்கைகளை கண்காணிப்பதையும் உறுதிப்படுத்துவது.
- முக்கியமான கட்டுப்பாட்டு கட்டமைப்பை ஸ்தாபித்து அதன் தேவையான விளைபயனைத் தரும் ஆற்றலை தொடர்ச்சியாக மறுமதிப்பீடு செய்து கொள்வது.
- கொள்கை விருத்தி, அமுலாக்கல், மீளாய்வு, தீர்மானம் எடுத்தல், கண்காணித்தல், கட்டுப்பாடு, அறிக்கையிடல் ஆகியவற்றுக்கென ஆவணப்படுத்தப்பட்ட, வெளிப்படையான முகாமைத்துவ நடைமுறகளை தெளிவாக ஸ்தாபித்தல்.
- பணிப்பாளர்கள் சபை அதன் பங்களிப்பை பயன்விளைவாக மேற்கொள்வதற்கு அவசியமான தகவல்கள், ஆலோசனைகள், வளங்கள் ஆகிய அனைத்தையும் வழங்குதல்.
- நிறைவேற்று முகாமைத்துவத்தின் சகல விவகாரங்களுக்கும் வங்கியின் இறுதி செயற்பாட்டுக்கும் சபையினால் முன்வைக்கப்படும் கொள்கைளின் அமுலாக்கலுக்கும் தலைவர் பொறுப்பாவார் என்பது உறுதிப்படுத்தப்படும்.
- தலைவரதும் பணிப்பாளர்கள் சபையினதும் பங்களிப்பும் 1955ஆம் வருட SBI சட்டத்தினால் அதன் திருத்தங்களுடன் வழிநடத்தப்படும்.
  ஒத்திசைவு விடயங்கள் தொடர்பில் பொருத்தமான சகல சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் நடைமுறைகள்
  கொள்கைகள் GOI/RBI இனாலும் ஏனைய ஒழுங்குபடுத்துநர்கள், சபை மற்றும் அறிக்கை மாறுபாடுகள்
  ஏதேனும் இருப்பின் ஒரு சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி பொறுப்பாக இருப்பதை உறுதிப்படுத்துதல்.

வங்கி கூட்டாண்மை நிருவாகத்தின் 2015ஆம் வருட SEBI பிரமாணங்களுக்கு மற்றும் LODR திருத்தங்கள், விதிமுறைகள் 2018 அமைய 1955ஆம் வருட SBI சட்டத்திற்கு அமையாமலும் RBI/GOI இனால் உத்தரவுகள் வழங்கப்பட்டன. வங்கியில் கூட்டாண்மை நிருவாகத்தின் இந்த பிரமாணங்களது அமுலாக்கல் தொடர்பான ஒரு அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது:

மத்திய சபை: பங்களிப்பும் ஆக்கக் கூறும்

State Bank of India 1955ஆம் ஆண்டில் பாராளுமன்ற சட்டத்தினால் தோற்றுவிக்கப்பட்டது. அதாவது The State Bank of India Act, 1955 (Act). இந்த சட்டத்தின்படி மத்திய பணிப்பாளர்கள் சபை ஒன்று நிறுவப்பட்டது. வங்கியின் மத்திய சபை அதன் அதிகாரங்களை 1955ஆம் வருட SBI சட்டம் மற்றும் பிரமாணங்களிலிருந்து பெற்று அதன்படி அதன் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. அதன் முக்கிய பங்காற்றல்கள் ஏனையவற்றுடன் பின்வருவனவற்றை கொண்டுள்ளது:

- வங்கியின் இடர்பாடுகள் பற்றிய முக்கியமான விவரத் தொகுப்பை மேற்பார்வை செய்தல் ;
- வங்கியின் வணிக, கட்டுப்பாட்டு பொறிமுறைகளின் நேர்மைத் தன்மையை கண்காணித்தல்;
- நிபுணத்துவ முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துதல்,
- அத்துடன் அதன் பங்குதாரர்களின் அனுகூலங்களை அதிகரித்தல்.

SBI சட்டத்தின் 19(a) பிரிவின் கீழ் நியமிக்கப்படும் தலைவரது தலைமையில் மத்திய சபை செயற்படுகிறது. SBI சட்டத்தின் 19(b) பிரிவின் கீழ் நான்கு முகாமைப் பணிப்பாளர்களும் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிறார்கள். தலைவரும் முகாமைப் பணிப்பாளர்களும் முழுநேர பணிப்பாளர்களாவர். 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திதியளவில் தொழில்நுட்பம், கணக்கீட்டுப் பணி, நிதியியல், கல்விப் பகுதி ஆகிய துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தி சக்திவாய்ந்த தொழிலறிஞர்களும் ஏனைய 7 பணிப்பாளர்களும் சபையில் செயலாற்றினர். 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திதியளவில் மத்திய சபையின் ஆக்கக்கூறு பின்வருமாறு அமைந்திருந்தது:

- தலைவர் மத்திய அரசாங்கத்தினால் RBI u/s 19(a) இன் ஆலோசனையுடன் நியமிக்கப்படுகிறார்,
- நான்கு முகாமைப் பணிப்பாளர்கள் மத்திய அரசாங்கத்தினால் RBI u/s 19(b) இன் ஆலோசனையுடன் நியமிக்கப்படுகிறார்கள்,
- நான்கு பணிப்பாளர்கள் 19(c) பிரிவின் கீழ் பங்குதாரர்களால் தெரிவு செய்யப்படுகிறார்கள்,
- ஒரு பணிப்பாளர் மத்திய அரசாங்கத்தினால் 19(d) பிரிவின் கீழ் பிரேரிக்கப்படுகிறார்கள்,
- ஒரு பணிப்பாளர் (இந்திய அரசாங்க அதிகாரி) மத்திய அரசாங்கத்தினால் 19(e) பிரிவின் கீழ் பிரேரிக்கப்படுகிறார்,
- ஒரு பணிப்பாளர் (Reserve Bank of India அதிகாரி) மத்திய அரசாங்கத்தினால் 19(f) பிரிவின் கீழ் RBI இன் விதப்புரையின் பேரில் பிரேரிக்கப்படுகிறார்,

சபையின் ஆக்கக் கூறு SEBI இன் (கடப்பாடுகளையும் வெளிப்படுத்தல் தேவைகளையும் பட்டியல்படுத்தும்) விதி 17(1)இல் தெரிவிக்கப்பட்ட 2015ஆம் வருட பிரமாணங்களுக்கு ஒத்திசைவாக அமைகிறது. பணிப்பாளர்களுக்கு இடையே பரஸ்பர தொடர்புகள் எதுவும் இல்லை.

மத்திய சபையின் நிறைவேற்று குழு

மத்திய சபையின் நிறைவேற்று குழு 1955ஆம் வருட SBI சட்டத்தின் 30வது பிரிவுக்கு அமைய நிறுவப்படுகிறது.
State Bank of India இன் பொது பிரமாணங்களுக்கு (46 &47) அமைய மத்திய சபையின் பொதுவான அல்லது விசேட அறிவுறுத்தல்களின்படி மத்திய சபையின் செயலாற்றலுக்கு உட்பட்ட எந்தவொரு விடயத்தையும் ECCB கையாளலாம். தலைவர், முகாமைப் பணிப்பாளர்கள், SBI சட்டத்தின் 19(f) பிரிவின் கீழ் Reserve Bank of India வினால் பிரேரிக்கப்பட்ட பணிப்பாளர் ஆகியோருடன் வழமையாக இந்தியாவில் கூட்டம் நடைபெறும் இடங்களில் வசிக்கும் எந்த பணிப்பாளர்களும்ECCB யில் அங்கம் வகிக்கின்றவர்களாவர். ECCB கூட்டங்கள் வாரம் ஒரு தடவை இடம்பெறும். இந்த வருடத்தில் 2025-26, 52 ECCB கூட்டங்கள் நடைபெற்றன. 1955ஆம் வருட SBI பிரமாணங்களின்படி குறைநிறைவெண் தேவைகள் மிகக் கவனமாக இணங்கப்பட்டுள்ளன.

ஏனைய சபைமட்ட குழுக்கள்:

1955ஆம் வருட SBI சட்டம், பொது பிரமாணங்கள் ஆகியவற்றுக்கும் Govt./RBI/ SEBI வழிகாட்டல்களுக்கும் அமைய சபையின் கணக்காய்வு குழு, சபையின் இடர் முகாமைத்துவ குழு, பங்குதாரர்களின் தொடர்புக் குழு, பெருமளவிலான மோசடிகளை கண்காணிப்பதற்கான சபையின் விசேட குழு, சபையின் வாடிக்கையாளர் சேவைக் குழு, தகவல் தொழில்நுட்ப செயற்திட்ட குழு, கூட்டாண்மை சமூக பொறுப்புக் குழு, சபையின் ஊதியகுழு, அறவீட்டை கண்காணிப்பதற்கான சபைக் குழு, வேண்டுமென்றே தவறிழைப்போர்/ஒத்துழைப்பற்ற கடன்காரர்கள், சபையின் நியமனக் குழு போன்ற மேலும் 9 சபை மட்ட குழுக்களை மத்திய சபை நிறுவியுள்ளது. முக்கிய பிரிவுகளான கணக்காய்வும் கணக்கீடும், இடர் முகாமைத்துவம், பங்குதாரர்களின் தீர்மானம் / முதலீட்டாளர்கள் குறைபாடுகள், மோசடி மீளாய்வும் கட்டுப்பாடும் வாடிக்கையாளர் சேவை மீளாய்வு, வாடிக்கையாளர் குறைபாடுகளுக்கு நிவாரணம், தொழில்நுட்ப முகாமைத்துவம், கூட்டாண்மை சமூக பொறுப்புக்கள், நிறைவேற்று பணிப்பாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு, கடன்கள், முற்பணங்கள் அறவீட்டில் விடுபாடுகள், வேண்டுமென்றே தவறிழைப்போர்/ஒத்துழைப்பற்ற கடன்காரர்கள் ஆகியோரின் அடையாளத்தை மீளாய்வு செய்து தேர்தலில் பணிப்பாளர்கள் பதவிக்கு வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் வேட்பாளர்களின் அந்தஸ்து குறித்து முறையானதும் உரியதுமான தீர்மானத்தை எடுத்தல்.

ஊதியக் குழு முழுநேர பணிப்பாளர்களுக்கு இந்திய அரசாங்க வழிகாட்டல்களை அடிப்படையாக வைத்து ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதுடன் தேவைப்படும் வேளைகளில் கூட்டத்தை நடத்தும் அதேவேளை ஏனைய குழுக்கள் கொள்கை விடயங்களில் தீர்மானம் எடுப்பதற்கும் அல்லது செயற்கள செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கும் அவ்வப்போது, பொதுவாக காலாண்டுக்கு ஒரு தடவை மத்திய சபையினால் மீளாய்வுக் காலம் அங்கீகரிக்கப்படும் போது கூட்டத்தை நடத்துகின்றன. குழுக்கள் தேவைப்படும் போது வங்கியின் உயர் நிறைவேற்று அதிகாரிகளின் சேவைகளை பெற்றுக் கொள்வதை தவிர வெளியக நிபுணர்களையும் அழைக்கின்றன. அவசியம் தேவையான கவனத்தை ஈர்த்து பங்குதாரர்களால் பணிப்பாளர்களாக தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் வேட்பாளர்களின் முறையான அந்தஸ்தை அவதானிப்பதற்கென நியமனக் குழு அமைக்கப்படுகிறது. குழுக்களின் கூட்டங்களில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பான சுருக்கமான அறிக்கைகள் அடங்கிய நடவடிக்கைக் குறிப்பும் நிகழ்ச்சி விவரங்களும் மத்திய சபை முன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

சபையின் கணக்காய்வுக் குழு 1994ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27ஆம் திகதி நிறுவப்பட்டு கடைசியாக 2023ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் திகதி மீளமைக்கப்பட்டது. RBI வழிகாட்டல்களுக்கு அமைவான ACB செயற்பாடுகள் SEBI பிரமாணங்களுக்கு (பட்டியல்படுத்தப்படும் கடப்பாடுகளும் வெளிப்படுத்தல் தேவைகளும்) ஒத்திசைவாக இருப்பதுடன் 2015ஆம் வருட விதிமுறைகள் RB இனால் வழங்கப்பட்ட உத்தரவுகள் / வழிகாட்டல்களை மீறுவதாகவும் இல்லை.

தொடர்பாடல் வழிமுறைகள்

ACB இன் செயல்பாடுகள்

அ. வங்கியின் மொத்த தணிக்கை செயல்பாட்டின் செயல்பாட்டை மேற்பார்வையிடுவதோடு ACB இலக்கினையும் வழங்குகிறது. மொத்த தணிக்கை செயல்பாடு, வங்கியில் உள்ளக தணிக்கை மற்றும் ஆய்வின் அமைப்பு, செயல்பாடுகள் மற்றும் தரக்கட்டுபாடு மற்றும் சட்டரீதியான/வெளிப்புற தணிக்கை, ரிசர்வ் வங்கியின் ஆய்வின் இணக்கம் ஆகியவற்றைக் குறிக்கிறது. இது வங்கியின் சட்டரீதியான கணக்காய்வாளர்களை நியமிக்கிறது, மற்றும் அவ்வப்போது அவர்களின் செயல்திறனை மதிப்பிடுகிறது.

ஆ. அதிக வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த வங்கியின் நிதி, இடர் மேலர்ணமை, IS தணிக்கை கொள்ளைகள் மற்றும் வங்கியின் கண்க்கியல் கொள்ளைகள்.˙.அமைப்புகளை ACB மதிப்பிடுகிறது.

இ. ACB வங்கியின் உள்ஆய்வு/தணிக்கைத்திட்டம் மற்றும் செயல்பாடுகளை மதிப்பிடுகிறது. அமைப்பு, அதன் தரம் மற்றும் பின்வருவன குறித்தும் கவனம் செலுத்துகிறது.
- KYC-AML வழிகாட்டுதல்கள்
- வீட்டு பராமரிப்பின் முக்கிய பகுதிகள்
- SEBI இணக்கம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறை 2015.

ஈ. இது வங்கியில் உள்ள இணக்கத் துறையிலிருந்து அறிக்கைகளைப் பெற்று மதிப்பிடுகிறது.

கணக்காய்வு தணிக்கைக் குழு

உ. பிரிவு 35 இன் கீழ் ரிசர்வ் வங்கியின் இடர் அடிப்படையிலான மேற்பார்வையில் எழுப்பப்பட்ட அனைத்து சிக்கல்களையும் ACB பின் தொடர்கிறது. வங்கி உழுங்குமுறை சட்டம், 1949 மற்றும் சட்டரீதியான தணிக்கையாளர்கள் மற்றும் பிறரின் நீண்ட படிவ தணிக்கை அறிக்கைகள், உள் தணிக்கை அறிக்கைகள். வருடாந்திர / காலாண்டு நிதிக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள் இறுதி செய்யப்படுவதற்கு முன்னர் இது வெளிப்புற தணிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்கிறது. தணிக்கைக் குழுவின் முறையான "தணிக்கை சாசனம்" அல்லது "குறிப்பு விதிமுறைகள்" மத்தியவாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் தணிக்கைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மதிப்புரை கலெண்டரும் நடைமுறையில் உள்ளது. இது அவ்வப்போது புதுப்பிக்கப்படுகிறது. கடைசியாக திருத்தப்பட்டது 18 டிசம்பர் 2014.

தகவல் தொடர்பு அர்த்தங்கள்

அனைத்து பங்குதாரர்களுக்கும் அதன் செயல்பாடுகள், செயல்திறன் மற்றும் தயாரிப்பு முயற்சிகள் பற்றிய முழுமையான தகவல்கள் சேர வேண்டும் என்று வங்கி உறுதியாக இருக்கிறது. 2025-26 ஆம் ஆண்டிற்கான வங்கியின் ஆண்டு, அரையாண்டு மற்றும் காலாண்டு முடிவுகள் நாட்டின் முன்னணி செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டன. முடிவுகள் வங்கியின் வலைத்தளமான www.sbi.co.in/https://bank.sbi இல் காட்டப்பட்டன. வருடாந்திர அறிக்கை வங்கியின் அனைத்து பங்குதாரர்களுக்கும் அனுப்பப்படுகிறது. வங்கியின் வலைத்தள காட்சிகள் ஊடாக, வங்கியின் அதிகாரப்பூர்வ செய்தி வெளியீடுகள், வங்கியின் ஆண்டு அறிக்கைகள், அரையாண்டு மற்றும் காலாண்டு முடிவுகள் மற்றும் பல்வேறு தயாரிப்பு வழங்கல்களின் விவரங்கள் ஒவ்வொரு ஆண்டும் வருடாந்திர, அரையாண்டு, காலாண்டு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், அதே நாளில் ஒரு பத்திகையாளர் சந்திப்பு நடத்தப்படுகிறது. அதில் தலைவர் ஒரு விளக்கக்காட்சியை அளித்து ஊடகங்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பார். இதைத் தொடர்ந்து மற்றொரு கூட்டத்திற்கு பல முதலீட்டு ஆய்வாளர்கள் அழைக்கப்படுகிறார்கள். வங்கியின் செயல்திறன் பற்றிய விபரங்கள் கூட்டத்தில் ஆய்வாளர்களுடன் விவாதிக்கப்படுகின்றன. காலாண்டு முடிவுகளை அறிவித்த பிறகு பத்திரிகை அறிவிப்புகள் வழங்கப்படுகின்றன.

சபையின் இடர் முகாமைத்துவ குழு

சபையின் இடர் முகாமைத்துவ குழு கடன் இடர்பாடு, சந்தை இடர்பாடுகள், செயற்பாட்டு இடர்பாடுகள் ஆகியன தொடர்பான ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவத்திற்கான கொள்கையையும் செயலாற்றலையும் மேற்பார்வை செய்வதற்காக 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி அமைக்கப்பட்டது. கடைசியாக 2023ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் திகதி மீளமைக்கப்பட்ட இக்குழுவில் 7 பேர் அங்கம் வகிக்கிறார்கள். நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் குழுவின் தலைவராவார். குறைந்தது காலாண்டுக்கு ஒரு தடவையாக வருடத்தில் நான்கு தடவைகள் இடர் முகாமைத்துவ குழு கூடுகிறது. 2024-25 காலப்பகுதியில் 4 கூட்டங்கள் நடைபெற்றன.

தொடர்பாடல் வழிமுறைகள்

1. வங்கி அதன் ஊக்குவிப்பாளர்கள், பணிப்பாளர்கள் அல்லது முகாமைத்துவம் மற்றும் துணை நிறுவனங்கள் அல்லது உறவினர்களுடன் வங்கியின் நலனுக்கு முரண்பாட்டை ஏற்படுத்தும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட்டதில்லை.
2. கடந்த மூன்று வருடங்களில், பங்கு பரிமாற்றங்கள் SEBI, RBI அல்லது மூலதன சந்தைகள் அல்லது வேறெந்த சட்டபூர்வ அதிகாரியினால் குறித்துரைக்கப்பட்ட பொருந்தக்கூடிய விதிகள், பிரமாணங்களுக்கு ஒத்திசைவாக வங்கி செயற்பட்டுள்ளது.
3. வங்கியின் விசில் ஊதுவோர் கொள்கை தகவல் அளிப்பவரின் பொது நலன் வெளிப்படுத்தல், பாதுகாப்பு ஆகியன தொடர்பான இந்திய அரசாங்கத்தின் கட்டளை நியதிகளின் அடிப்படையிலானதாக இருக்கும். வங்கியின் சகல ஊழியர்களும் சக ஊழியர்கள் மற்றும் சிரேஷ்ட, உயர்நிலை அதிகாரிகளின் நீதிமுறையற்ற, ஊழல் நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான விசில் ஊதுவோராக செயற்படுவதற்கு உள்ளக அறிக்கையிடல் பொறிமுறையான கொள்கை பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான PIDPI முறைபப்பாடானது முறைப்பாடுகளை அவதானிக்கும் மத்திய விழிப்பு ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்ட இந்திய அரசாங்கத்தின் 2004ஆம் வருட வழிகாட்டல்களின்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
4. சம்பந்தப்பட்ட தரப்பு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கொள்கையையும் துணை கொள்ளையையும் வங்கியின் www.sbi.co.in/bank.sbi or https://bank.sbi என்ற இணையத்தளத்தில், தொடர்புக் கூட்டாண்மை நிர்வாக கொள்கைகள் என்ற தலைப்பின் கீழ் பார்க்க முடியும்.
5. பிரமாணம் 17இலிருந்து 27 வரையும், பிரமாணம் 46(2), பத்திகள் C, D, E மற்றும் அட்டவணை V ஆகியவற்றின் விதிக் கூறுகள் (b) இலிருந்து (i) வரை 1955ஆம் வருட State Bank of India சட்டத்தின் பிரமாணங்களையும் அதன்படி இயற்றப்பட்ட விதிகள், பிரமாணங்களையும் Reserve Bank of India வினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டல்களையும் உத்தரவுகளையும் கூட்டாண்மை நிருவாக தேவைகளுக்கு அமைய வங்கி செயற்பட்டுள்ளது.